மூதூர் பிரதேச சபை

திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 14 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் முகாமைத்துவ அறிக்கை 2020 யூலை 08 மற்றும் 2020 யூலை 14 ஆம் திகதிகளில் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் மூதூர் பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் சபையில் காணப்பட்ட காகிதாதிகள் மற்றும் மின்சார இருப்பு பதிவேட்டின் படி இருப்பு ரூபா 181,020 மற்றும் ரூபா 49,845 ஆக முறையே காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 487,829 மற்றும் ரூபா 67,685 ஆக முறையே காட்டப்பட்டுள்ளது. | பதிவேட்டின் படி இருப்புக்களை நிதிக்கூற்றிற்கு கொண்டுவரப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இத்தவறானது 2020 அறிக்கையின் போது சீர் செய்யப்படும். |
| (ii) | வீதவரி நிலுவைகள் நிதிக்கூற்றின் படி ரூபா 6,234,228 தொகையாக காணப்பட்ட போதிலும் வருமான நிலுவைக்கூற்றில் ரூபா 6,307,745 தொகையாக காணப்பட்டமையினால் இவ்விரண்டிற்கும் இடையில் ரூபா 73,519 வித்தியாசம் காணப்படுகின்றது | சரியான வீதவரி நிலுவைகள் கணக்கிடக்கிடப்பட்டு நிதிக்கூற்றிற்கு கொண்டுவரப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் அறிக்கை தயாரிக்கும் முன்னர் இவ்வித்தியாசத்தினைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

(ஆ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2014 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட ரூபா 11,129,351 தொகையான முற்பண மீதிகள் தொடர்பான முற்பணப் பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இதனால் கணக்காய்வின் போது மீதியை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | முற்பண மீதிகளை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் இம்மீதித் தொகையினைச் சீர் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

1.4 இணங்காமைகள்

1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| அ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதியின் அத்தியாயம் X | | | |
| (i.) பிரிவு 191 | மாதாந்த சபைக் கூட்டறிக்கையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான 12 கூட்டறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வில் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | கூட்டறிக்கை பிரதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாதாந்த சபைக் கூட்டறிக்கைகள் குறித்த கூட்டம் நடைபெற்று 15 நாட்களுக்குள் தங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ii). பிரிவு 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | முரண்பாட்டுக்கான விளக்கங்களுடன் கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆண்டுக்கான உள்ளபடியான வருமான மற்றும் செலவினம் தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிட்டு முரண்பாட்டுக்கான காரணம் நிதி வருடம் முடிவடைந்து 30 நாட்களுக்குள் தங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும். |
| ஆ) மோட்டார் வாகன போக்குவரத்துச் சட்டம் பிரிவு 203 | 13 வாகனங்களுக்கு மீளாய்வாண்டில் வருமான உத்தரவுப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களுக்கு வருமான உத்தரவு பத்திரம் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பாவனைக்கு உட்படுத்தும் (running Contition) நிலையில் உள்ள சகல வாகனங்களுக்கும் வருமான உத்தரவுப் பத்திரம் பெறப்பட்டுள்ளது. |
| இ) பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 30/2016 இலக்க சுற்றறிக்கை பந்தி 3.1 | பாவனையில் உள்ள 21 வாகனங்களுக்கு எரி பொருள் பரீட்சிப்பு செய்யப்பட்டிருக் கவில்லை. | அறிக்கையைப் பெற உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பாவனைக்கு உட்படுத்தக் கூடிய நிலையில் உள்ள அனைத்து வாகனங்களும் எரிபொருள் பரிசோதகரினால் பரிசீலிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்களிடமிருந்து அறிக்கை இதுவரை கிடைக்கப் பெறவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார்விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 24,896,945 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 12,170,412 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2019 பாதீடு | 2019 ஆண்டுக்கான வருமானம் | 2019 பெறப்பட்ட வருமானம் | 2019.12.31 இல் நிலுவை | 2018 பாதீடு | 2018 ஆண்டுக்கான வருமானம் | 2018 பெறப்பட்ட வருமானம் | 2018.12.31 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" |
| வீதவரிகள் | 1,217 | 1,217 | 929 | 6,234 | 850 | 850 | 422 | 6,213 |
| வாடகை | 20,590 | 13,997 | 14,327 | 6,262 | 17,295 | 14,512 | 14,014 | 3,281 |
| அனுமதி பத்திர கட்டணம் | 1,901 | 1,438 | 1,156 | 744 | 1,398 | 1,369 | 1,180 | 218 |
| மொத்தம் | 23,708 | 16,652 | 16,412 | 13,240 | 19,543 | 16,713 | 15,616 | 9,712 |

### 2.2.2 வீதவரிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 6,234,228 கூட்டு மொத்தமான வீதவரிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உரிய விடயங்களில் கூடிய கவனம் எடுத்து நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது கடந்த ஆண்டுகளுக்கான ஆதன வரி நிலுவை எமது அலுவலக ஊழியர்களைக்கொண்டு அறவிடப்பட்டுக் கொண்டிருக்கின்றது |

### 2.2.3 பஸ் தரிப்பு நிலையக்கடை வாடகை வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) உடன்படிக்கை செய்யப்பட்டே கடைகள் குத்தகைக்கு வழங்கப்பட வேண்டிய போதிலும் மேற்கூறிய 40 கடைகளில் 34 கடைகளுக்கே உடன்படிக்கை செய்யப்பட்டு குத்தகைக் காலம் குறிப்பிடப்படாமல் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | ஒப்பந்தம் செய்யப்படாத கடைகளுக்கு ஒப்பந்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒப்பந்தம் செய்யப்படாத 6 கடைகளுக்கும் ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| (ii) வழங்கப்பட்ட கடைகள் தொடர்பாக 2014 சனவரி 01 தொடக்கம் கணக்காய்வுத் திகதியான 2019 திசெம்பர் 31 வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 922,250 பெறுமதியான வாடகைப்பணத்தை அறவிட சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாடகை நிலுவை பகுதிபகுதியாக அறவிடப்பட்டுக் கொண்டிருப்பதுடன் செலுத்தத் தவறியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. |

| | | |
|---|---|---|
| (iii) உடன்படிக்கையின் பிரிவு 2 இன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் ஆண்டு தோறும் வாடகைப் பெறுமதியில் 10% அதிகரிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இன்று வரை இவ் அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 10% அதிகரிப்புடன் ஒப்பந்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் ஒப்பந்தத்தை புதுப்பித்து அனைவருக்கும் வழங்கும்போது வருடாவருடம் 10% அதிகரிப்பைக்காட்டி ஒப்பந்ததம் செய்யப்படுவதுடன், நிலுவைகள் முழுமையாக அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் |

2.2.4 நாவலடி சந்தி கடைத்தொகுதியை வாடகைக்கு வழங்குதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அலுவலக கடைத்தொகுதி மற்றும் நாவலடி சந்தி கடைத்தொகுதிக்குரிய வாடகை நிலுவை மீளாய்வாண்டு வரை முறையே 815,808 மற்றும் ரூபா 9,900 தொகையாக காணப்பட்ட போதிலும் இவ் நிலுவைத் தொகையை கணக்காய்வுத் திகதியான 2020 பெப்ரவரி 24 ஆம் திகதிவரை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நாவலடிச்சந்திக் கடைத்தொகுதிக்கான குத்தகைக் காலம் 30.11.2019 இல் முடிவடைந்துள்ளது. இக்கடைக்குரிய கேள்வி வைப்புக்கள் வாடகை வருமானத்திற்கு மாற்றப்பட்டுச் சீர் செய்யப்படுகின்றது. அத்தோடு அலுவலகக் கீழ்க் கடைத் தொகுதிக்கான குத்தகைக் காலம் 2022 ஆம் ஆண்டில் முடிவடையும். அதற்கான கேள்வி வைப்பும் இதில் காணப்படுகின்றது.அதனை பாதுகாப்பு வைப்பிற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். |

2.2.5 சந்தைக்கடை வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபையின் 82 கடைகளை சபையினால் 35 வருடங்களுக்கு முன்பு வாடகைக்கு வழங்கப்பட்ட போது செய்யப்பட்ட உடன்படிக்கைகள் அதன் பின்னர் புதுப்பிப்பதற்கு இன்று வரை உடன்படிக்கை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கைகளை புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை புதுப்பிக்கப்படாமல் உள்ளதனால் அதனைப் புதுப்பிப்பதற்கான நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும்.(இந்நடவடிக்கை தொடர்பான கடிதப்பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளன.) |

| | | |
|---|---|---|
| (ஆ) இக்கடைகளிற்கான வாடகை நிலுவை மீளாய்வாண்டு வரை ரூபா 1,509,427 தொகையாக காணப்பட்ட போதிலும் இவ் நிலுவைத் தொகையை கணக்காய்வுத் திகதியான 2020 பெப்ரவரி 24 ஆம் திகதி வரை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019.12.31 வரை 310,935 நிலுவை அறவிடப்பட்டுள்ளது. இத்தொகை ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்பட்டாலும் மிக விரைவாக குறித்த காலக்கெடு வழங்கப்பட்டு முழுத்தொகையும் அறவிட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அக்காலத்திற்குள் நிலுவைகளைச் செலுத்தாத கடைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) இப்பிரதேசத்தில் தற்போது நிலவும் வாடகைப் பெறுமதி குறைந்தது ரூபா 3,000 தொடக்கம் ரூபா 5,000 தொகையாக காணப்பட்ட போதிலும் சபையானது 35 வருடங்களுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட ரூபா 150 தொடக்கம் ரூபா 500 தொகையினையே இன்று வரை வாடகைப் பெறுமதியாக நிர்ணயித்துள்ளது. | விலைமதிப்பீட்டு திணைக்களத்தின் அறிக்கையைப் பெற்று அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எமது அலுவலக வருமான மேற்பார்வையாளர்களைக் கொண்டு கடைகளின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு அளவுப் பிரமாணத்திற்கேற்ப தற்காலிக வாடகை நிர்ணயிக்கப்பட்டு வாடகை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| (ஈ) கடைகளைப் பெற்ற வாடகைதாரர்களில் 15 பேர் அக்கடைகளை மாதாந்த வாடகையாக ரூபா 700 தொடக்கம் ரூபா 4,500 பெறுமதிக்கு உப குத்தகைக்கு வழங்கியிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. | சபையினால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சகல கடைகளும் பரீட்சிக்கப்பட்டு இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும |

### 2.2.6 இறைச்சிக் கடை குத்தகை வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இறைச்சிக்கடை குத்தகையாளர்கள் குத்தகையை செலுத்தத் தவறும் போது அவர்களது பாதுகாப்பு வைப்பிலிருந்து குத்தகைத் தொகையை அறவிடாமல் வருட இறுதியிலே இந்நடைமுறை பின்பற்றப்படுவதனால் ரூபா 7,279,598 தொகையான நிலுவைகள் அறவிடப்படாது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுவருகின்றது. மேலும் இந்நிலுவைகளுக்கு சபையினால் காலப்பகுப்பாய்வை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்காமையால் கணக்காய்வின் போது மீதியை உறுதிப்படுத்த முடியாமல் உள்ளது. | நிலுவைகளை அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடந்த 2019 ஆம் ஆண்டு ஆரம்ப நிலுவையாக ரூபா:- 8,297,399 காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டில் தற்போதைய நிலுவை ரூபா:-7,279,598 காணப்படுகின்றது என்பதுடன், 2019 ஆம் ஆண்டிற்கான குத்தகைப் பணம் முழுமையாக அறவிடப்பட்டுள்ளன. |

2.2.7 முத்திரைத் தீர்வை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதிவரை கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணத்தை கணிப்பீடு செய்து பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முத்திரைக் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் முத்திரைத் தீர்வை வரி விபரங்கள் தை தொடக்கம் சித்திரை மாதம் வரை பெறப்பட்டுள்ளன.ஏனைய மாதங்களின் விபரங்கள் பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன முழுவதும் கிடைத்தவுடன் உரிய முறையில் அறவிடப்படும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக 20 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு அவற்றிக்கான அனுமதியைப் பெற்று நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | உப விதிகள் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாகாண சபை கலைக்கப்பட்டதனால் இதுவரை அதற்கான அனுமதி கிடைக்கப்பெறவில்லை. |

(ஆ)எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை அடைவதற்குத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சம்பூர் பிரதேசத்தில் புறநெகும செயற்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் 2017 ஆம் ஆண்டு ரூபா. 4,094,702 பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்ட தாய் சேய் பராமரிப்பு நிலையம் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தாது சனசமூக நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. | கட்டடங்களை கட்டும் போது உரிய செயலாற்று அறிக்கை தயாரிக்கப்பட்டு கட்டடங்கள் கட்டப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விரைவில் அக்கட்டடம் சபையின் நடவடிக்கைகளுக்கு வருமான மீட்டும் வளமாக மாற்றப்படும். |

(இ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| i. மீளாய்வாண்டில் மூன்று ஒப்பந்தங்கள் ஆரம்பிப்பதற்கு ரூபா 9,100,789 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 28 பெப்ரவரி 2020 வரை எதிர்பாக்கப்பட்ட விளைவுகளை அடையாது அவ் ஒப்பந்தங்கள் கைவிடப்பட்டிருந்தன. | ஒப்பந்தத்தின் படி தொடர்புடைய கட்டுமானப்பணிகளை முடித்து அதற்கேற்ப பணம் செலுத்தவேண்டும். | ஆசாத் நகர் மற்றும் தோப்பூர் பொழுதுபோக்கு பூங்காக்களுக்கான ஒப்பந்தங்கள் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டு எமது சபையின் மேற்பார்வையின் கீழ் வேலைகள் நடைபெற்று வந்தன.இவ்வேலைத் திட்டங்களுக்கான நிதி குறித்த ஒப்பந்தகாரருக்கு வழங்கப்படாமையினால் வேலைத் திட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற முடியாமல் இடைநிறுத்தப்பட்டன.<br><br>ஜின்னா சனசமுக நிலையம் அமைத்தல் வேலைத் திட்டம் சனசமுக நிலையத்தினூடாக ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் அது உப ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டதால், வேலையின் கொடுப்பனவு உப ஒப்பந்தகாரருக்குக் கிடைக்காததனால் நிதி பிரச்சனை காரணமாக அவர் அவ்வேலைத் திட்டத்தினை இடைநிறுத்தி விட்டார். |
| ii. சபை சரியான தகைமையுடைய ஒப்பந்தக்காரரை ஆரம்பத்திலேயே தெரிவு செய்து ஒப்பந்தத்தை வழங்காததினால் அச்செயற்பாடு கைவிடப்பட்டிருந்தது. | தகுதியான வரையறைகளுடன் ஒப்பந்தத்தை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.மற்றும் அவை தொடர்பான பணிகளைப்பெற வேண்டும். | அவ்வீதியின் மீதி வேலைகள் விரைவாக செய்து முடிக்கப்படும். |

(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, நிலைபேறான அபிவிருத்திச் இலக்குச் சட்டத்தின் பிரகாரம் அதன் நோக்கம் மற்றும் இலக்கு என்பவற்றை சபையினால் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. மேலும் | நிறுவனத்திற்கு உரிய நிலை பேறான அபிவிருத்தி சுட்டிகளை இனம் கண்டு அதற்கு ஏற்ற மாதிரி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான மூலங்கள் கண்டறியப்பட்டு அதனை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

2030 ஆம் ஆண்டில் அடையப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) ஒரு செயற்பாடற்ற வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 55,351 மீதி 12 வருடங்களாக காணப்பட்ட போதிலும் அக்கணக்கினை வருமானம் உழைக்கக்கூடிய வகையில் மாற்றுவதற்கு கணக்காய்வுத் திகதியான 2020 பெப்ரவரி 28 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதற்கான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) யுனிசெப் நிறுவன நிதி உதவித்திட்டத்தின் கீழ் சம்பூர் பிரதேசத்தில் மீள்குடியேறிய 03 பயனாளிகளுக்கு நீர் இணைப்பு வசதிகளை வழங்குவதற்கு ரூபா 11,344 தொகை 2016 திசெம்பர் 25 ஆந் திகதி செலுத்தப்பட்ட போதிலும் இன்றுவரை நீர் இணைப்புக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை | நீர் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போதும் இப்பிரச்சனை காணப்படுவதால் நீரிணைப்பு வழங்குவதற்காக செலுத்தப்பட்ட கட்டணத்தை மீளெடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், நீரிணைப்பு வழங்கும்போது இக்கொடுப்பனவு மீள வழங்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

3.3 மனிதவள முகாமைத்துவம்

ஊழியர் கடன்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அமைய ஊழியர் ஒருவருக்கு வழங்கப்பட்ட ரூபா 102,620 தொகையான கடன் 10 ஆண்டுகளாக அறவீடு செய்யப்படாது நிலுவையாகக் காணப்படுகின்றன. | உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இவரது கடன் அறவீடு பற்றி உரிய ஆலோசனையினைப் பெற்று இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.அது தொடர்பாக சபையின் தீர்மானமும் பெறப்பட்டுள்ளது. |

3.4. சொத்துக்கள் முகாமைத்துவம்

3.4.1 உரிமை மாற்றம் செய்யப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நன்கொடையாக பெற்றுக்கொள்ளப்பட்ட 12 மோட்டார் வாகனங்கள் 13 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சபையினால் காணப்பட்ட போதும் அவற்றை சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமை மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எனது MUPS/WP/RMP/2017ம் இலக்க, 2017.10.25ம் திகதிய கடிதம்மூலம் வாகனச் சொந்தமுடைவர்களின் விபரங்கள் அறிவதற்காக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. ஆவணங்களை பெற்றால் மட்டுமே அதனை ஏலத்தில் விடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியம்.எனினும் இதற்கான தீர்வுகள் விரைவில் எட்டப்படும். |

3.4.2 சொத்துக்களிலிருந்து பெறவேண்டிய வருமானங்களைப் பெறத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தோப்பூரில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான கட்டிடத்தில் காணப்படும் அறை ஒன்றினை 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை மின்சார சபையின் உப அலுவலகம் இயங்குவதற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் இன்று வரை எவ்வித உடன்படிக்கையும் செய்யப்பட்டு வாடகை அறவிடுவதற்கான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. | மின்சார சபையுடன் ஒப்பந்தம் ஏற்படுத்தி வாடகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தோப்பூரில் மின்சார சபைக்கு வழங்கப்பட்டுள்ள கட்டடம் சம்பந்தமாக உரிய கோவையை ஆராய்ந்து துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் அவைபற்றி அவ்வப்போது தங்களுக்கு அறியத்தரப்படும். |

3.4.3 பயன்படுத்தப்படாமல் உள்ள சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான Pickup வாகனங்கள் திருத்தம் செய்து பயன்படுத்தக்கூடிய நிலையில் காணப்பட்டிருந்தும் 02 வருடத்திற்கு மேற்பட்ட காலமாக திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு அல்லது அவற்றை ஏலத்தில் விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறிக்கையை பெற்று அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | Pickup வாகனத்தினை பகிரங்க ஏலத்தில் விடுவதற்கென விலை நிர்ணயக் குழுவினரால் பார்வையிட்டு விலை நிர்ணயிக்கப்பட்டது. எனினும் அதன் அறிக்கை இதுவரை கிடைக்கப்பெறவில்லை.கிடைத்தது ம் அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |

3.4.4 வருடாந்த இருப்பு மென்மையாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அ) 2018 ஆம் ஆண்டு வருடாந்த இருப்புக் கணிப்புச் செய்த குழுவினர் சபையில் காணப்படும் 04 உழவு இயந்திரங்கள் 03 தண்ணீர் பௌசர்கள், திண்மக்கழிவு அகற்றும் பௌசர் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றை விற்பனை செய்யுமாறு பணித்திருந்ததும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறிக்கையை பெற்று அதன்பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் | இருப்புக் கணிப்புச் சபைக் குழுவினரால் அடையாளம் காட்டப்பட்ட 04 உழவு எந்திரங்களும் 03 தண்ணீர் பவுசர்களும் மோட்டார் வாகனப் பரிசோதகர்களினால் குறைந்த பட்ச விலை நிர்ணயம் செய்வதற்காகப் பரிசோதிக்கப்பட்டன. எனினும் அதற்கான விலை நிர்ணய அறிக்கை கிடைக்கப் பெறவில்லை கிடைத்ததும் அதற்கான மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

3.5 பெறுகை

3.5.1 பெறுகை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டம் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு ஆண்டிற்கும் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் | 2020 ஆம் தொடக்கம் அது முறைப்படி தயாரித்து உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

3.5.2 ஒப்பந்த நிர்வாகம்

அ) கழிவுத் தொட்டி அமைத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| i. இவ் வேலைக்காக செய்யப்பட்ட உடன்படிக்கையில் உடன்படிக்கை செய்த திகதி ஒப்பந்த காலப்பகுதி என்பன குறிப்பிடப்படாமல் இருந்தது. இதன் காரணமாக தாமதக்கட்டணம் அறவிட முடியாமல் போய்விட்டது. | உடன்படிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒப்பந்த காலம் தவறுதலாக குறிக்கப்பட்டிருக்கவில்லை.இனிவரும் காலத்தில் கவனத்தில் எடுத்துக் கொள்ளபப்டும். |

| | | |
|---|---|---|
| ii. கணக்காய்வுத் திகதியான 2020 பெப்ரவரி 28 ஆம் திகதி வரை ரூபா. 355,774 பெறுமதியான பூச்சு பூசுதல், சுத்திகரிப்புக்காக மணல் போடுதல் போன்ற வேலைகள் நிறைவுபெற்றிருக்கவில்லை. | வேலைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாவண்ணம் பார்த்துக் கொள்ளபப்டும். |
| iii. இவ் வேலை திட்டமிட்டபடி குறித்த காலத்தினுள் நிறைவு செய்யப்படாமையினால் இதுவரை செலவு செய்யப்பட்ட ரூபா. 826,174 தொகை மூலம் பெறப்பட வேண்டிய பயன் கிடைக்கப்பெறுவதற்கு காலதாமதமாகின்றது. | திட்டத்தை பூர்த்தி செய்து அதன் பயன்பாட்டைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் குறித்த தொகைக்காகன வேலைத் திட்டத்தினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

ஆ. கொங்கீரிட் பாதை அமைத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் 2019 இல் 04 கொங்கீரிட் பாதைகள் அமைக்கப்பட்டிருந்தும் பாதைகளுக்கு பரவி இடப்பட்ட கிரவலின் நீளம், அகலம், உயரம், அளவுச் சிட்டையில் குறிப்பிடாமல் கிரவல் பரவப்பட்டுள்ளதனால் உண்மையில் பரப்பப்பட்ட கிரவலின் அளவினை கணிப்பிட முடியாதிருந்தது. | கிரவல் பரவும் போது நீளம்இ அகலம்இ உயரம் என்பன அளவுச்சிட்டையில் குறிப்பிடப்பட வேண்டும். | இதுவரை காலமும் எமது சபையினாலோ அல்லது நேுடுளுஜீ போன்ற வேலைத் திட்டங்களின் மூலமோ மேற்கொள்ளப்பட்ட வீதிகளுக்காக போடப்பட்ட கிரவல் கனிய அளவு சிட்டையில் ீடைடடைபெ அநயளரசநஅநவெ மூலமே கொடுப்பனவு சிபார்சு செய்யப்பட்டதனால் அந்த நடைமுறையே தொடர்ச்சியாகப் பின்பற்றப்பட்டு வந்துள்ளது.இனி வரும் காலங்களில் எமது |

இ. நில உரிமை உறுதிப்படுத்தப்படாமை

பின்வரும் நிர்மாணங்கள் அமைக்கப்பட்ட இடத்தின் உரிமை சபையினால் உறுதிப்படுத்தப்படாமல் நிர்மாணிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ----------------------------------------- | ----------------- | ------------------------------------------------- |
| i. தோப்பூர் பொழுதுபோக்கு பூங்கா | நில உரிமையை உறுதிப்படுத்திய பின் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் இது தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படும். |
| ii. நின்னா சன சமுக நிலையம் அமைத்தல் | நில உரிமையை உறுதிப்படுத்திய பின் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும். | இனிவரும் காலங்களில் இது தொடர்பாக கவனத்திற் கொள்ளப்படும் |